மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.
அசல் வழக்கு எண். 122/2018

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 09-ம் நாள் செவ்வாய்க்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 09.01.2024 | தந்தை/கணவர் பெயர்: | பக்கிரிசாமி |
| பெயர்: | காமராஜ்<br>(PW-2 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | திருவந்திக்கட்டளை, சீர்காழி | சமயம்: | |
| சாதி: | | வயது : | 62/2023 |
| தொழில்: | | | |

<u>முதல் விசாரணை : 09.01.2024.</u>

நான் இவ்வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

<u>2-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

இந்த வழக்கை யார் யார் மீது என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா வழக்குரையில் எத்தனை அயிட்ட சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் தாவா சொத்துக்களை அனுபவிப்பதாக சொல்லியுள்ளது எதன் அடிப்படையில் பாத்தியப்பட்டு அனுபவித்து வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியம்

அளிக்க அழைப்பானை வரவில்லை என்றால் சரிதான். என்னை சாட்சியம் சொல்ல அழைத்து வந்தது 2-ம் வாதி கிருஷ்ணன் என்றால் சரிதான். அவர் விருப்பத்திற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

தாவா சொத்திற்கு அருகில் எனக்கு நிலம் உள்ளதா என்றால் உள்ளது. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் தாவா சொத்திற்கு அருகில் எனக்கு நிலம் இருப்பதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திறக்கு அருகில் எனக்கு பாத்தியப்பட்டதாக உள்ள நிலம் பட்டா நிலமா என்றால் ஆமாம். தாவா சொத்திற்கு அருகில் எனக்கு சொந்தமாக நிலம் இல்லை என்றும் அவ்வாறு இருந்திருப்பின் அதற்கான ஆவணம் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. 2-ம் வாதி எனது ஊர்காரரா என்றால் இல்லை. வழக்குரை விவரங்கள் தெரியாததால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>6-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u> 2-ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.

மறுவிசாரணை இல்லை.